# 5.7 சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள் – ஒவ்வொரு சிக்கலுக்கும்

**இலக்கு**

*பிரச்சினை தீர்வுக்காக ஓர் உத்தியை மாணவர் கற்றுக் கொள்வார். முயன்று பெறக்கூடிய திறன்கள் மற்றும் நாட்டங்கள் ஆகியவற்றுடன் சிக்கல் தீர்த்தல் என்பதும் தொடர்பானது என அவர்கள் விளங்கிக் கொள்கின்றனர்.*

வகுப்பு 6 - 9 | 60 மணித்துளிகள்

**கருவிகள்:**
பணித்தாள் "சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள்" முதன்மை நகல் (அடுத்த பக்கத்தில்)

**நடைமுறை:**

- ஆசிரியர் ஓர் உண்மையான முரண்பாட்டுச் சூழலை விபரிப்பார். (எடுத்துக்காட்டு கீழே) அந்தச் சூழ்நிலை ஒரு நாடகமாக நடிக்கப்படும். எப்படி அப்பிரச்சினை தீர்க்கப்படும் என மாணவர் கலந்துரையாடுவர். "சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள்" என்னும் மாதிரி உருவில் பட்டியல் இடப்பட்ட பகுதிப் படிமுறைகளை ஏற்கனவே அவர்கள் விபரிக்கின்றனர் என்று கொள்ளலாம்.
- "சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள்" எனும் பணித்தாளைப் பெற்று மாணவர் வாசிப்பர். பின்னர் தங்கள் பள்ளித்தோழர் குழுவில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே ஏற்படும் முரண்பாடுகள் பற்றிய எடுத்துக்காட்டுப் பட்டியல் ஒன்றை அவர்கள் தொகுப்பர். எடுத்துக்காட்டுகள்:
    - ஒரு சிறுமி / பையன் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போக விரும்புகிறாள் / ன். பெற்றோர் அதனை எதிர்க்கின்றனர், பிள்ளை படிக்கவேண்டுமெனக் கூறுவர். எல்லாவற்றுக்கும் மேலாக பிள்ளை அந்த நிறுவனத்துக்குப் போகக்கூடாது.
    - ஒரு மாணவன் தன் வகுப்புத் தோழனை / தோழியை அவனது / அவளது உச்சரிப்புக் குறைபாட்டை அல்லது பேச்சுத் தடையை நகையாடுகிறான் / ள்.
    - ஒரு ஆண் / பெண் இன்னொரு ஆண் / பெண் மாணவரை சந்திக்கிறார், ஆனால் பெற்றோர் அவர் பிறப்புக் காரணமாக (எ.கா. அவர் வேறொரு இனத்தைச் சார்ந்தவர் அல்லது வேறு நாட்டிலிருந்து வந்தவர் என்பதால்) எதிர்க்கின்றனர்.
    - இடைவேளையின் போது சில இளையவர் குறிப்பிட்ட இசையைக் கேட்க விரும்புகின்றனர். ஆனால் மற்றவர் அதற்கு எதிராக உள்ளனர். ஏனெனில் அவர்கள் வேறு ஒரு வகையான இசையைக் கேட்க விரும்புகின்றனர்.
    - பலர் ஒரு குறிப்பிட்ட மாணவரின் அருகில் இருக்க மறுக்கின்றனர். ஏனெனில் அவர் பிறப்பு, சமயம், தேசிய இனம் தொடர்பில் பிழையான எண்ணம் காரணமாக.
- ஒரு முரண்பாடு தெரிவு செய்யப்படும். அது மிகவும் விரிவாக ஆராயப்படும். (மாற்று: 2 – 3 குழுக்களுக்காக 2 – 3 முரண்பாடுகள்)
- முதல் படிமுறையில், 6 படிமுறை திட்டத்தை தொடர்ந்து முரண்பாட்டுக்கான பகுதியினர் (எ.கா. எல்லா "பெற்றோர்", ஒரு வகை இசையைக் கேட்க விரும்பும் இளையோர், அந்த இடத்தில் இருக்க விரும்பாத சிறுவர் ∴ சிறுமியர்.) தாம் வேறாக தம் நிலைப்பாட்டைக் கலந்துரையாடக் கூடுகின்றனர். பின்னர் அதே குழுவில் உள்ள எதிர்த் தரப்பினருடன் 6 படிமுறைத் திட்டப்படி பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவர். ஆசிரியர் 15 – 20 மணித்துளிகளின் பின்னர் பேச்சுவார்த்தைகளை நிறுத்துகிறார். மாணவர்கள் தமது வகுப்பறைக்குத் திரும்பி அங்கு தமது பட்டறிவுகளை வகுப்பு முழுவதுமாகப் பரிமாறுவர்.
- குறிப்பு: இக்குழுக்கள் ஓர் இடையீட்டாளரை தெரிவு செய்வது என்பது விரும்பத்தக்கது, இவர் 6 படிமுறை திட்டத்தினூடாக அவர்களை வழிநடத்துவார். இச் செயற்பாடு பயிற்சியினூடாக இரண்டாம் சுற்றிலும் நடைமுறைப்படுத்தலாம்.

---

- "சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள்" பணித்தாளின் முதன்மை நகல் அடுத்த பக்கத்தில்.

ப.தா.

# 6 படிமுறைகளில் சிக்கலைத் தீர்த்தல்.

மாணவர்களுக்கான பணித்தாள்

| | | |
|---|---|---|
| **1. படிமுறை:** | **தேவைகளைத் தெளிவாக்குதல்.** | |
| | உமது தேவை என்ன?<br>உமக்கு சரியாக என்ன வேண்டும்? | *இம்முரண்பாட்டுக்கு உரிய ஒவ்வொரு பகுதியும் மற்றவர்களில் குற்றம் சாட்டாமல் அல்லது அவர்களுக்கு எதிராகக் குற்றங்கள் சுமத்தாமல் இவ்வினாவுக்கு மறுமொழி கூறவேண்டும்.* |
| **2. படிமுறை:** | **சிக்கலைச் சரியாக விபரிக்குக.** | |
| | இந்த பிரச்சினையில் என்ன சிக்கல் என்று நீர் நினைக்கிறீர்? | *எல்லா மாணவரும் தங்கள் பார்வையிலிருந்து சிக்கலை விபரிக்க முடியும். எதிராளிகள் மற்றைய குழுவினரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.* |
| **3. படிமுறை:** | **வெவ்வேறு தீர்வுகளைத் தேடல்** | |
| | ஏற்படக்கூடிய ஏனைய தீர்வுகள் எப்படி இருக்கும்? | *எல்லா மாணவர்களும் மறுமொழிப் பங்களிப்புச் செய்யலாம். இவை எந்த உரையோ மதிப்பீடோ இல்லாமல் எழுத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.* |
| **4. படிமுறை:** | **தீர்வுகளை மதிப்பிடல்** | |
| | பல்வகைத் தீர்வுகளுடன் நீர் எவ்வாறு மனநிறைவு அடைவீர்? | *முரண்பாடுகளுக்கான ஒவ்வொரு பகுதியும் தீர்வுக்கான பல்வேறு பரிந்துரைகளையும் மதிப்பீடு செய்து எவற்றை ஏற்றுக்கொள்ளலாம், ஏன்? எவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது, ஏன்? என்பதை விளக்குவர்.* |
| **5. படிமுறை:** | **எந்தத் தீர்வு மிகச்சிறந்தது என்பதைத் தீர்மானிக்குக.** | |
| | இத்தீர்வை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா?<br>சிக்கல் தீர்க்கப்பட்டதா? | *இரு பகுதியினரும் தீர்வை ஏற்றுக்கொள்கின்றாரா? என்பதில் தெளிவாயிருக்க வேண்டும். தீர்வுக்கான அவர்களது முயற்சி பாராட்டப்பட வேண்டும்.* |
| **6. படிமுறை:** | **தீர்வு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதைப் பகுப்பாய்வு செய்க.** | |
| | சிக்கல் தீர்ந்துவிட்டதா என உறுதிப்படுத்த தற்போதுள்ள சூழ்நிலை பற்றி இன்னொரு முறை பேசுவோம் | *தீர்வை மதிப்பீடு செய்ய ஒரு திட்டம் வகுக்கப்படும். முரண்பாட்டின் தன்மையைப் பொறுத்து, முரண்பாட்டுக்குள்ளாகிய குழுக்களின் வயதைப் பொறுத்து ஒரு சில நிமிடங்களில் அல்லது மணித்தியாலங்களில் அல்லது அடுத்த பாடம் தொடங்கும் வரை ஒரு மதிப்பீடு நடைமுறைப்படுத்த முடியும்.* |